RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 182 | ஜூலை.8 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ஹிட்டாச்சி ரூ.1,000 கோடி முதலீடு! : முதல்வர் விஜய் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை: ஜூலை.8

ரூ.1,000 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் போரூரில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் மற்றும் செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் விஜய் முன்னிலையில் கையெழுத்தானது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் விஜய் முன்னிலையில் (ஜூலை 7) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 3 முதல் 5 ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் கூடுதலாக 1,000 நபர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் அளித்திடும் வகையில், சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கும், செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.




ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், ஹிட்டாச்சி குழுமம், உலகளாவிய ஃபார்ச்சூன் 500 (Global Fortune) நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் மற்றும் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இக்குழுமத்தின் துணை நிறுவனங்கள் ஆகும்.

இன்று, முதல்வர் முன்னிலையில், 3 முதல் 5 ஆண்டுகளில், 1000 கோடி ரூபாய் முதலீட்டில், சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கும், செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 1,000 உயர்தர தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி, ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் தலைமை வளர்ச்சி அலுவலர் கார்த்திக் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தோனேசியாவின் உயரிய விருது: பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவிப்பு

ஜகார்த்தா: ஜூலை.8-

இந்தோனேசியாவின் உயரிய குடிமை விருதான 'பிந்தாங் அதிபூர்ணா' பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது. அந்நாட்டின் அதிபர் பிரபோவோ சுபியான்டோ இதனை வழங்கினார்.

பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் பயணமாக நேற்று இந்தோனேசியா சென்றார். தலைநகர் ஜகார்த்தா சென்றடைந்த அவரை, அதிபர் பிரபோவோ சுபியான்டோ விமான நிலையத்துக்கே சென்று வரவேற்றார். இந்தோனேசியா வாழ் இந்தியர்களும் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

இதையடுத்து, பிரதமர் மோடியின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளைத் தொடங்கும் விதமாக அதிபர் மாளிகையான இஸ்தானா மெர்டேகாவில் அவருக்கு அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது, அதிபர் பிரபோவோ சுபியான்டோ மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் தங்கள் தூதுக்குழு உறுப்பினர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

இதையடுத்து, செய்தியாளர்கள் முன்னிலையில்



இந்தோனேசியாவின் உயரிய குடிமை விருதான 'பிந்தாங் அதிபூர்ணா' விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு அதிபர் பிரபோவோ சுபியான்டோ வழங்கினார்.

விருதைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய பிரதமர் மோடி, "மிகுந்த அன்போடும் மரியாதையோடும் இந்தோனேசியாவின் உயரிய விருது எனக்கு வழங்கப்பட்டது. இந்த கவுரவம் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு உரியது. அதிபர் பிரபோவோவுக்கும் இந்தோனேசிய மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா இந்தோனேசியா இடையே 2018 ல் தொடங்கப்பட்ட விரிவான கூட்டாண்மை, இப்போது புதிய உயரங்களை எட்டி வருகிறது. வளர்ச்சி, பாதுகாப்பு, தொழில்நுட்பம், கலாச்சாரம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் நாங்கள் முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இன்று முதல் இரு நாடுகளின் கூட்டாண்மையின் பொற்காலம் தொடங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இன்று மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவின் உயர்தர, குறைந்த விலை கொண்ட மருந்துகள் இந்தோனேசிய மக்களுக்கு இன்னும் எளிதாகக் கிடைக்கும். இந்தோனேசியாவில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் திறன் மேம்பாட்டுக்கும் நாங்கள் பங்களிப்போம்.

உலகளவில் கொந்தளிப்பு நிலவும் இந்த காலகட்டத்தில் பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தின் பங்கு முன்னெப்போதையும்விட முக்கியமானது என்று இந்தியா நமபுகிறது. பாலஸ்தீன விவகாரத்தில் இரு நாடு தீர்வு மற்றும் நீண்டகால அமைதியை நாங்கள் ஆதரிக்கிறோம்" என தெரிவித்தார்.

# தேர்தல் வழக்கு: முதல்வர் விஜய் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை: ஜூலை.8-

தமிழக முதல்வர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து, திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் இனிகோ இருதய ராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த நான்கு வழக்குகளும் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் இன்று விசாரணைக்கு வந்தது. இதனுடன், வில்லிவாக்கம் தொகுதியில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் கார்த்திக் மோகன் மற்றும் சிவராஜ் ஆகியோர் தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்குகளும், அவர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் படி தேர்தல் வழக்குகள் 6 மாதங்களில் முடிக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, பெரம்பூர், திருச்சி கிழக்கு, வில்லிவாக்கம் ஆகிய தொகுதிகள் தொடர்பான தேர்தல் வழக்குகளில் முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மற்றும் இந்திய தேர்தல் ஆணையம் 3 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

# கோரிக்கைகளை நிறைவேற்ற 48 மணி நேர கெடு: பாக். அரசுக்கு ஆக்கிரமிப்பு காஷ்மீர் அமைப்பு எச்சரிக்கை

முசாபராபாத்: ஜூலை.8-

கைது செய்யப்பட்ட தலைவர்களை விடுவித்தல் உள்ளிட்ட தங்கள் கோரிக்கைகளை 48 மணி நேரத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசுக்கு ஜம்மு காஷ்மீர் கூட்டு மக்கள் செயற்குழு கெடு விதித்துள்ளது. இல்லாவிட்டால், வரும் 9ம் தேதி மிகப்பெரிய இறுதிக்கட்டப் போராட்டம் நடத்தப்படும் என்று அது எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதியில் அரசியல் கொந்தளிப்பு அதிகரித்து வருகிறது. 38 கோரிக்கைகளை முன்வைத்து, ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதியைச் சேர்ந்த ஜம்மு காஷ்மீர் கூட்டு மக்கள் செயற்குழு (ஜேஏஏசி) என்ற அமைப்பு போராடி வருகிறது.



இந்த அமைப்பை பாகிஸ்தான் அரசு தடை செய்துள்ளது. எனினும், இந்த அமைப்பின் சார்பில் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போராட்டங்களில் ஈடுபட்ட பலர் கொல்லப்பட்ட நிலையில், 600 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தங்கள் அமைப்பின் மீதான தடையை நீக்க வேண்டும், தகவல் தொடர்பு சேவைகளை மீண்டும் வழங்க வேண்டும், உணவு, மருந்து ஆகியவற்றை தடையின்றி வழங்க வேண்டும், கைது செய்யப்பட்ட தலைவர்களை விடுவிக்க வேண்டும், மேலும், 38 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஜம்மு காஷ்மீர் கூட்டு மக்கள் செயற்குழு முன்வைத்துள்ளது. இந்த கோரிக்கைகளை 48 மணி நேரத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் இல்லாவிட்டால் நாளை மறுநாள் மிகப் பெரிய இறுதிக்கட்டப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அது எச்சரித்துள்ளது.

மேலும், ஜூலை 9 அன்று நடைபெற உள்ள போராட்டத்தில் பங்கேற்குமாறு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் மக்களுக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் காஷ்மீரிகளுக்கும் அது அழைப்பு விடுத்துள்ளது.

# "அமோனியா கசிவு ஆலைக்கு செல்லாத அமைச்சர் கீர்த்தனா, அரசுப் பள்ளியில் அத்துமீறலாமா?" : சீமான்

சென்னை: ஜூலை.8-

"அமோனியா கசிவு நிகழ்ந்த தொழிற்சாலைக்கு ஆய்வுக்குச் செல்லாத தொழிற்துறை அமைச்சர் கீர்த்தனா, பள்ளிகளில் குழந்தையிடம் கேள்வி எனும் பெயரில் அத்துமீறலாமா?" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அரசுப் பள்ளியை ஆய்வு செய்வதாகக் கூறிக்கொண்டு, தவெக அரசின் தொழிற்துறை அமைச்சர் கீர்த்தனா அரசுப் பள்ளியில் படிக்கும் ஒரு குழந்தையிடம் கேள்விகேட்டு நடந்துகொண்ட விதம் அதிர்ச்சியளிக்கிறது.

குழந்தைக்குத் தன்னம்பிக்கையும், உத்வேகமும் அளிக்கும் வகையில் பேசாது, அக்குழந்தையைக் கூனிக் குறுக வைத்து, தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளும் விதத்தில் நடந்துகொண்டிருப்பது மிகவும் மலினமான விளம்பர அரசியலாகும். தங்களது அரசியல் ஆதாயம் தேடலுக்காகவும், விளம்பர மோகத்திற்காகவும் குழந்தைகளைக் கூட பலிகடாவாக்கத் துடிக்கும் தவெக அரசின் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது.



ஆங்கிலம் என்பது ஒரு மொழிதானே ஒழிய, அறிவல்ல எனும் அடிப்படை உண்மையைக்கூட உணராத அமைச்சர் கீர்த்தனா, தன்னை அதிமேதாவியாகக் காட்டிக்கொள்வதற்காக ஆங்கிலமறியாத அக்குழந்தையைக் குற்றப்படுத்தலாமா? கடைசி இருக்கைக் குழந்தைகள் நன்றாகப் படிக்க மாட்டார்கள் எனும் பொருளில் பள்ளியில் பேசலாமா? அப்படிப் பார்த்தால் சட்டமன்றத்தில் கடைசி வரிசையில் இருப்பவர்கள் எல்லாம் அறிவில்லாதவர்களா என்ன? சட்டமன்றத்தில் முதல் வரிசையில் அமர்ந்து இருப்பவர்களுக்குக்கூட அறிவுப்பேரொளி சுடர்விட்டு எரிவது போல தெரியவில்லையே?.

ஒரு குழந்தையிடம் என்ன பேச வேண்டும்? எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? எனும் அடிப்படைப் பண்புகளைக்கூட கற்காத இவர் அக்குழந்தைக்குப் பாடமெடுப்பது கேலிக்கூத்து இல்லையா? வெள்ளை அறிக்கை வெளியிடும்போது அமைச்சர் மரிய வில்சன் தமிழைப் படிக்கவே தடுமாறி நின்றதை நாடே பார்த்ததே, தாய்மொழி தமிழை உச்சரிக்க முடியாது ஒரு அமைச்சரே திணறி நின்றது அவமானமில்லையா?.

இந்த லட்சணத்தில் அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு, ஒரு அரசுப்பள்ளிக் குழந்தையைக் கைகட்டி நிற்கச் செய்து, கேள்வி எனும் பெயரில் அத்துமீறுவது அக்குழந்தையின் மீதான உளவியல் வன்முறை.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே அமோனியா கசிவால் இதுவரை 18 பேர் இறந்துபோயிருக்கிறார்கள். தனக்குத் தொடர்பே இல்லாத துறையில் ஆய்வு எனும் பெயரில் அத்துமீறும் தொழிற்துறை அமைச்சரான கீர்த்தனா, அமோனியா கசிவால் உழைக்கும் மக்கள் இறந்துபோன அந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட ஏன் செல்லவில்லை?.

வடசென்னை பகுதிகளில் இருக்கும் தொழிற்சாலைகள் பல சூழியல் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில், அத்தொழிற்சாலைகளில் விதிகள் சரியாகக் கடைபிடிக்கப்படுகிறதா என என்றைக்காவது ஆய்வுக்குச் செய்யச் சென்றிருக்கிறாரா?. அமோனியா கசிவு நிகழ்ந்த தொழிற்சாலைக்கு ஆய்வுக்குச் செல்லாத தொழிற்துறை அமைச்சர் கீர்த்தனா, பள்ளிகளில் குழந்தையிடம் கேள்வி எனும் பெயரில் அத்துமீறலாமா? எல்லாம் விளம்பரமோகம் படுத்தும் பாடு. வெட்கக்கேடு.

ஆகவே, தவெக அரசின் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அரசுப்பள்ளிகளில் அத்துமீறுவதையும், அரசியலைப் புகுத்துவதுமான மோசமானப் போக்கைக் கைவிட்டு, ஆக்கப்பூர்வமான மக்கள் பணிகளில் இனியாவது கவனம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.



## சாலை விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் போக்குவரத்து காவல்துறைக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்கிய தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

தேனி, ஜூலை.8-
தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ள சாலை பாதுகாப்பு நிதி (Road Safety Fund) திட்டத்தின் கீழ், சாலை விபத்துகளை கட்டுப்படுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் தேனி மாவட்ட போக்குவரத்து காவல்துறைக்கு பல்வேறு போக்குவரத்து பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, சாலையோரங்களில் அமைப்பதற்கான Traffic Signal Lights, வேகக் கட்டுப்பாட்டு எச்சரிக்கை பலகைகள், வேகத்தடை எச்சரிக்கை பலகைகள், விபத்து அதிகம் நடைபெறும் பகுதிகளை எச்சரிக்கும் பாதுகாப்பு பதாகைகள், மேலும் பொதுமக்களிடையே போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் LED TV காட்சிப் பலகைகள் உள்ளிட்ட உபகரணங்களை,தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ரி.ஷி.பிரவீன் கௌதம், தேனி மாவட்ட போக்குவரத்து காவல்துறையினருக்கு வழங்கினார்.இந்நிகழ்வின்போது, சாலை பாதுகாப்பு விதிகளை பொதுமக்கள் முழுமையாக பின்பற்றுவதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்து உயிரிழப் புகளை குறைக்க முடியும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுறுத்தினார்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளுக்கு காப்போம் திட்டத்தின் கீழ் கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்




நீலகிரி, ஜூலை.8-
நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ், கையெழுத்து இயக்கத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு, பாலினப் பாகுபாட்டை ஒழித்திடவும், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி மற்றும் உரிமைகளை உறுதி செய்திடும் நோக்கிலும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், பாலின சமத்துவத்தை நிலைநாட்டுதல், பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவித்தல், குழந்தைத் திருமணம், பெண் சிசுக்கொலை, பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முற்றிலுமாக ஒழித்திட அனைவரும் உறுதியேற்கும் வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையெழுத்திட்டு தங்களது உறுதி மொழியினை வெளிப்படுத்தினார்கள். மேலும், அரசு உயர்நிலை அலுவலர்கள், பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கையெழுத்திட்டு உறுதிமொழியை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணாதேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்




## திருவள்ளூர் பிரஸ் கிளப்சங்கத்தின் மாதாந்திர கூட்டம் மாவட்டத் தலைவர் பிரபு முனுசாமி தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர், ஜூலை.8-
திருவள்ளூர் மாவட்ட பிரஸ்கிளப் சங்கத்தின் மாதாந்திர கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள மாவட்ட பிரஸ் கிளப் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் பிரபுமுனுசாமி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்திக்கு செயலாளர் கோபி பொருளாளர் வசந்தகுமார் துணைத்தலைவர் சுரேஷ்,ஒருங்கிணைப்பாளர் குமரேசன்(எ) சாம் முன்னிலை வகித்தனர் மேலும் புதியஉறுப்பினராக இணைய வந்தவர்களுக்கு வாழ்த்துக் கூறி சால்வை அளித்து வரவேற்றனர் கூட்டம் முடிந்ததும் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரைநேரில் சந்தித்து பத்திரிகையாளரின் பாதுகாப்பு குறித்து கோரிக்கை வைத்தனர் குமார் 50க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## 40 கொண்டை ஊசி வளைவுகள் நிறைந்த மலைப்பாதையில் பயணிக்க சுற்றுலா பயணிகள் ஆர்வம்



வால்பாறை, ஜூலை.8-
பொள்ளாச்சியில் இருந்து வால்பாறை செல்லும் மலைப்பாதையில் அமைந்துள்ள 40 கொண்டை ஊசி வளைவுகள், தமிழகத்தின் மிகவும் அழகிய மலைச் சாலைப் பயணங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.பொள்ளாச்சியில் இருந்து சுமார் 64 கிமீ தூரம் கொண்ட இந்த மலைப்பாதை, ஆழியாறு அணையை ஒட்டிய அடிவார பகுதியில் தொடங்கி ஆனைமலை மலைத்தொடரின் சரிவுகளை ஊடறுத்து வால்பாறையை அடைகிறது. கடுமையான ஏற்றம், தொடர்ச்சியான வளைவுகள், பள்ளத்தாக்குகள் மற்றும் பசுமை நிறைந்த மலைக்காட்சிகள் இந்தச் சாலையின் தனிச்சிறப்பாகும்.

40 கொண்டை ஊசி வளைவுகளின் பெரும்பாலான இடங்களில் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி இயற்கைக் காட்சிகளை ரசிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆழியாறு அணை, தென்னந்தோப்புகள், மலைத் தொடர்கள் மற்றும் அடிவார சமவெளியின் தோற்றம் ஒரே இடத்தில் கண்கொள்ளா காட்சியாக தெரிகிறது. மழைக்காலத்தை தொடர்ந்து மலைச்சரிவுகள் பசுமை போர்த்தி காணப்படுவதால், இந்த பாதையில் பயணிப்பது சுற்றுலா பயணிகளுக்கு தனித்துவமான அனுபவமாக உள்ளது. சாலையோரங்களில் குரங்குகள், பறவைகள் உள்ளிட்ட வனவிலங்குகளையும் அவ்வப்போது காண முடிவதால் இயற்கை ஆர்வலர்களும் புகைப்படக் கலைஞர்களும் அதிகளவில் வருகை தருகின்றனர்.அதேசமயம், மலைச்சாலையில் தொடர்ச்சியான வளைவுகள் இருப்பதால், வேகமாக வாகனம் ஓட்டுவதைத் தவிர்த்து, போக்குவரத்து விதிகளை கடைபிடித்து பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என நெடுஞ்சாலை மற்றும் வனத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். பயணிகள் வருகை அதிகரிப்புவால்பாறையில் கடந்த சில நாட்களாக லேசான சாரல், அவ்வப்போது மிதமான வெயில் என இதமான காலநிலை நிலவி வருகிறது. இதனால், தினமும் வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வியூ பாயிண்ட்கள், அணைகள், பூங்காக்கள் உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டு மகிழ்கின்றனர்.

விடுமுறை நாட்களை தவிர சாதாரண நாட்களிலும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து வருவதால், உள்ளூர் வியாபாரம் அதிகரித்துள்ளதாக வணிகர்கள் தெரிவித்துள்ளனர்

present sale for
all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய கோரி ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு விவசாயிகளை ஏமாற்றுவதாக குற்றச்சாட்டு

பவானி, ஜூலை.8-
பவானியை அடுத்த பெரியபுலியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் முன்பு தேர்தல் அறிக்கையில் கூறியபடி தமிழ்நாடு அரசு முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி வழங்க கோரி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதற்கு, சங்க முன்னாள் தலைவர் கருப்பசாமி தலைமை தாங்கினார்.Travel Guides & Travelogues முன்னாள் துணைத்தலைவர் கதிர்வேல் வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத்தலைவர் வெங்கடாசலம், மாவட்டத் தலைவர் பெரியசாமி, மாவட்டச் செயலாளர் செங்கோட்டையன், பவானி ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, ஐக்கிய விவசாயிகள் சங்கத் தலைவர் சண்முகம் ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி பேசினர். தமிழ்நாடு அரசு ரூ.75 ஆயிரம் வரை பெற்ற பயிர் கடன்களுக்கு 100 சதவீதம் தள்ளுபடியும், அதற்கு மேற்பட்ட கடன்களுக்கு ரூ.35 ஆயிரம் வரை தள்ளுபடியும் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு விவசாயிகளை ஏமாற்றம் அடைய செய்ததுடன், வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.உர விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை, சாகுபடி செலவு அதிகரிப்பு, குடிநீருக்கு சிரமப்படும் நேரத்தில் கடனை திருப்பி செலுத்துவது இயலாத காரியம். பருவமழை பொய்த்து விட்டதால் அணைகளிலும் தண்ணீர் இருப்பு இல்லாததால் விவசாயம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என கூறியிருந்தார்.Time & Calendars அதன்படி, தமிழ்நாடு அரசு விவசாயிகளை ஏமாற்றாமல் கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.ஒருங்கிணைப்பாளர்கள் ராஜூ, ராமசாமி, சித்தோடு சி.துரைசாமி, கவுந்தப்பாடி விஜயகுமார், முன்னாள் இயக்குனர் பெருமாள் மற்றும் இச்சங்கத்தில் பயிர் கடன் பெற்ற விவசாயிகள் திரளானோர் கலந்து கொண்டனர்



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு மற்றும் கலால் துறை வாராந்திர கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா உட்பட பலர் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கி மையம், குழந்தைகள் துரித சிகிச்சைப் பிரிவு, பிரசவ வார்டு உள்ளிட்ட பிரிவுகளை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள், சிகிச்சை வசதிகள் மற்றும் நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா மருத்துவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய் உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன்

## கேப்டன் கூல் தோனிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள் முதல்வர் விஜய்

சென்னை, ஜூலை.8-
இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனிக்கு முதல்வர் விஜய் பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவித்துள்ளார். உங்கள் பயணம் தமிழ்நாட்டின் விளையாட்டு உணர்வின் ஒரு போற்றத்தக்க அங்கமாகிவிட்டது. இன்னும் பல ஆண்டுகள் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறோம். தோனியின் அமைதியான தலைமைத்துவம், பணிவான குணம் தலைமுறைகளைத் தொடர்ந்து ஊக்கப்படுத்துகின்றன என்று முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்**
**திருவள்ளூர் மாவட்டம்**
முனிரத்தினம்
த/பெ. சிர்ரைய்யா
NO.23.மெயின்ரோடு கொல்லப்பாளையம் கிராமம்
சூனிபாளையம் POST
ஊத்துக்கோட்டை TK.
திருவள்ளூர் மாவட்டம் 602023
மனுதாரர்
எதிர்
1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், திருவள்ளூர்
2. வருவாய் வட்டாட்சியர் அவர்கள் ஊத்துக்கோட்டை.
எதிர்மனுதாரர்
பொது அறிவிப்பு
மேற்கண்ட விலாசத்தில் நான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்னுடைய தாயார் நரசம்மா க/பெ.சிர்ரைய்யா என்பவர் 14.04.2000 அன்று மேற்கண்ட விலாசத்தில் இறந்து விட்டார்.என் அறியாமை காரணமாக இறப்பை பதிவு செய்ய தவறி விட்டேன் எனவே எனது தாயார் நரசம்மா இறப்பை பதிவு செய்து இறப்பு சான்று வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கு யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் 15 நாட்களுக்குள் வட்டாட்சியருக்கோ அல்லது கோட்டாட்சியருக்கு தெரிவிக்கவும் இல்லையெனில் ஒருதலை பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்.
**முனிரத்தினம்**
**க/பெ.சிர்ரைய்யா**
**கொல்லபாளையம்**
**செல்:9786977291**

## பழனியில் குற்றங்களை தடுக்க கடும் நடவடிக்கை: “நண்பனாக அணுகலாம்“ புதிய டி.எஸ்.பி. செல்வக்குமார் அதிரடி உறுதி!



திண்டுக்கல், ஜூலை.8-
திண்டுக்கல் மாவட்டம் பழனி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக (DSP) செல்வக்குமார் அவர்கள் புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பழனி பகுதி பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம்ஒழுங்கு பராமரிப்பு குறித்த முக்கிய அறிவிப்புகளையும், எச்சரிக்கைகளையும் அவர் விடுத்துள்ளார்.பழனி உட்கோட்டப் பகுதிகளில் மக்களின் பாதுகாப்பிற்கு முழு முதன்மைத்துவம் வழங்கப்படும். தேவையற்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்கள் மீது சட்டம் தன் கடமையை மிகக் கடுமையாகச் செய்யும். குற்றப் பின்னணி கொண்ட நபர்கள் மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது காவல்துறையின் தனிப் பார்வை இருக்கும். மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பள்ளி மற்றும் கல்லூரி வளாகப் பகுதிகளில் தேவையற்ற நபர்கள் நடமாடுவதும், அத்துமீறல்களில் ஈடுபடுவதும் முற்றிலும் தடை செய்யப்படும். இதனை மீறுபவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களைத் தவறான போதை பழக்கவழக்கங்களுக்குள் தள்ளும் சமூக விரோதிகள் எவராயினும் அவர்கள் மீது கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவார்கள். பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிவேகமாக இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள் மற்றும் 'பைக் ரேஸ்' போன்ற ஆபத்தான செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. மீறினால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு சட்டப் படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக இரவு நேர காவல் ரோந்துப் பணிகள் (Night Patrolling) இனி வரும் நாட்களில் தீவிரப்படுத்தப்படும். பழனி பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நடக்கும் சட்டவிரோத செயல்கள் அல்லது தங்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து எந்த நேரத்திலும் என்னை நேரடியாகத் தொடர்பு கொண்டு புகார்களைத் தெரிவிக்கலாம்.காவல் அதிகாரி என்ற பயம் இல்லாமல், "உங்களில் ஒருவன், உங்கள் நண்பன்" என்ற நம்பிக்கையோடு பொதுமக்கள் என்னை அணுகலாம் எனத் தெரிவித்துள்ளார்.9884741609





## ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை, அப்போலோ மருத்துவமனை, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து இலவச மருத்துவ முகாம்

மாதவரம், ஜூலை.8-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி கரிகாலன் நகர் மாயா ஹாலில் ஏ.ஆர்.டி.எஸ் அறக்கட்டளை, அப்பேபாலோ மருத்துவமனை, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து இலவச இதயம் மற்றும் பொது மருத்துவம், கண் அறுவை சிகிச்சை பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு சமூக பொருளாதார முன்னேற்ற அறக்கட்டளை (ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை) நிறுவனத் தலைவர் லயன் டாக்டர் ஏ.ஆர். தர்மலிங்கம், ராணி சங்குபதி ஆகியோர் தலைமையேற்று இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்து மருத்துவர்களை கௌரவித்து பொதுமக்களுக்கு இலவச மருந்து மாத்திரைகளை வழங்கினார். ஸ்ரீநவநீத கிருஷ்ணன் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவன நிர்வாக இயக்குநர் எம்.பி. புண்ணியசேகரன், ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை நிர்வாகிகள் மாயா சரவணன், மாயா சங்கர், ரஞ்சித் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க நிர்வாகி எம்.முகம்மது அபுபக்கர், சங்கத் தலைவர் எஸ்.ரமேஷ், செயலாளர் எஸ்.கோபி ஆகியோர் மருத்துவ முகாமை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இம்முகாமில் உயரம், எடை, இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு, ஈசிஜி, எஃகோ, கண் பரிசோதனை உள்ளிட்டவைகள் இலவசமாக பரிசோதிக்கப் பட்டு மருத்துவர்கள் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கஸ்பாபுரம் பகுதி 2வது வார்டு சார்பில் மாபெரும் அன்னதானம்





தாம்பரம், ஜூலை.8-
செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம் பரங்கிமலை வடமேற்கு ஒன்றிய அகரதென் ஊராட்சி கஸ்பாபுரம் பகுதி 2வது வார்டு சார்பில் தமிழக வெற்றிக் கழகம் தலைவர் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி கஸ்பாபுரம் 2வது வார்டு சேர்ந்த தாவெக நிர்வாகி சுரேஷ் இந்துமதி ஏற்பாட்டில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக பரங்கிமலை வடமேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ச. மணிகண்டன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் விஜய் பாபு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆதிகேசவன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள், கஸ்பாபுரம் இரண்டாவது வார்டு நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப. பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தமிழ்நங்கை, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வீரபாண்டிகம்பம் சாலையில் நுங்கு கழிவுகள் குவிந்துள்ளதால் அதில் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக புகார் வரப்பெற்றதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்லைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில், வீரபாண்டி பேரூராட்சி சார்பில் நுங்கு கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, சுகாதாரக் கேடு ஏற்படுத்தும் வகையில் சாலையோரங்களில் கழிவுகளை கொட்டுவதைத் தவிர்த்து, தூய்மையான சுற்றுச்சூழலை பேண அனைவரும் ஒத்துழைக்குமாறு பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## சேம்பார் பள்ளியில் மாணவர் பார்லிமென்ட் தேர்தல் கோலாகலம்!







சிவகங்கை, ஜூலை.8-
மாவட் டம்,காளையார்கோவில் அருகே சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 'மகிழ் முற்றம்' அமைப்பின் சார்பாக மாணவர் பாராளுமன்றத் தேர்தல் உற்சாகமாக நடந்தது. எதிர்காலத் தலைவர்களான மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பையும், ஒட்டுரிமையின் முக்கியத்துவத்தையும் வளர்க்கும் நோக்கில் இத்தேர்தல் நடத்தப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் சுரேஷ் தேர்தல் நடத்தும் முதன்மை அலுவலராகச் செயல்பட்டார். முன்னதாக, மாணவர்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்த உருவாக்கப்பட்ட குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை ஆகிய ஐந்து இல்லங்களின் (அணிகள்) தலைவர்களாக லிடிஸ்டினா, மகதி, அருள் ஜோஸ்வின், முகேஷ், டார்வின் தாவீது ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். விறுவிறுப்பான வாக்குப்பதிவு: இத்தேர்தலில் குறிஞ்சி அணிக்கு மட்டும் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடந்தது. மாணவர்கள் கைகளில் மை வைக்கப்பட்டு, தங்களுக்குப் பிடித்த வேட்பாளர்களுக்கு ஜனநாயக முறைப்படி ஓட்டளித்தனர். பிற துறைகளுக்கான அமைச்சர்கள் அனைவரும் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். வெற்றி பெற்ற புதிய அமைச்சர்கள்:ஜெர்லின் ஜாய் (கல்வி அமைச்சர் முல்லை அணி)அனன்யா (மாணவர் நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் மருதம் அணி)தர்ஷினி ஸ்ரீ (தகவல் தொடர்பு அமைச்சர் பாலை அணி) பால்கரிஸ் ஜெருவின் (சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைச்சர் நெய்தல் அணி)ஆரோ ஆஷிதா (சுகாதாரம் மற்றும் தூய்மை அமைச்சர் முல்லை அணி)புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் பள்ளியின் சுகாதாரம், நூலகப் பராமரிப்பு, தோட்டம் அமைத்தல் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவார்கள்.இவர்களது பதவியேற்பு விழா வரும் ஜூலை 10ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11:00 மணிக்கு, பள்ளி மேலாண்மைக் குழுவினர் முன்னிலையில் பள்ளியில் நடைபெற உள்ளது. தேர்தல் பணிகளை ஆசிரியர்கள் முத்துக்குமார், பாரதி மலர், சகாய செல்வி, தனபாக்கியம் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர். வெற்றி பெற்ற மாணவர்களைப் பெற்றோர்களும், ஊர் பொதுமக்களும் வெகுவாகப் பாராட்டினர்.

## குச்சனூர் சனீஸ்வர பகவான் திருக்கோயில் ஆடிப் பெருந்திருவிழா முன்னேற்பாடுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்



தேனி, ஜூலை.8-
தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் ஆடிப் பெருந்திருவிழா நடைபெற உள்ளதையொட்டி, மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் , குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் ஆடிப்பெருந் திருவிழாவின்போதுமேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்துத் துறை வாரியாக எந்தெந்த வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கலந்த ஆலோசனை மேற்கொண்டு, இந்து சமய அறநிலைத்துறையின் மூலம் திருவிழா காலத்தில் திருக்கோயிலில் சாமி தரிசனத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்கு தரிசனத்திற்கு செல்லும் வழியினை தெளிவாக வழிகாட்டிப் பலகை (Arrow mark) மூலம் காண்பித்தில், கோயில் வளாகம் முழுவதும் சிசிடிவி கேமரா அமைத்து கண்காணித்தல், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பான முறையில் தரிசனம் செய்ய வழிவகை செய்திட வேண்டும்.

குச்சனூர் பேரூராட்சி நிர்வாகம் மூலம் பக்தர்கள் திருக்கோயிலுக்கு வந்து செல்லும் வழிகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் இதர வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் சின்டெக்ஸ் தொட்டிகள் வைத்து போதிய அளவு குடிநீர் வழங்க வேண்டும். மேலும் நடமாடும் சுகாதார வாகனங்கள் இயக்குவதுடன், தற்காலிக கழிப்பறை வசதிகள் அமைத்திட வேண்டும். அதேபோல் நாள்தோறும் சேகரமாகும் குப்பைகளை அவ்வப்போது அகற்றிட போதுமான அளவு பணியாளர்களை நியமித்திட வேண்டும். திருவிழாவிற்கு அதிகளவு பக்தர்கள் வந்து செல்வதை கருத்தில் கொண்டு திருக்கோயில் வளாகம் மற்றும் பேருந்து நிலையம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் போதுமான அளவு மின்விளக்கு அமைத்திட வேண்டும். காவல்துறை மற்றும் இந்து சமய அறநிலைத்துறை ஒருங்கிணைந்து தேவையான இடங்களில் கூடுதல் காவல் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதுடன், 10.08.2026 அன்று நடைபெறும் சாமி ஊர்வலம் மற்றும் கருப்பணசாமி கிடா வெட்டு நிகழ்ச்சியின்போது தேவையான அளவு காவலர்களை நியமித்து சிறந்த முறையில் பணியாற்றிட வேண்டும்.மேலும், அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவையான அளவு கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கிட வேண்டும், திருவிழா காலங்களில் தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் மூலம் சீரான மின் விநியோகம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். பொது சுகாதாரத் துறையில் மூலம் தற்காலிக மருத்துவ முகாம் அமைத்து மருத்துவக் குழு செயல்பட்டு வருவதுடன், 108 ஆம்புலன்ஸ் சேவையினை தயார் நிலையில் வைத்துக் கொள்ளவேண்டும்.அதேபோல் தீயணைப்புத்துறை மற்றும் வட்டாரப் போக்குவரத்துத்துறை கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் கோயில் வளாகம் மற்றும் பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள உணவகங்களில் உணவுப் பொருட்களின் தரத்தன்மை குறித்து அவ்வப்போது ஆய்வு செய்து, நெகிழிகள் பயன்படுத்துவதை தடை செய்திட வேண்டும் என அறிவுறுத்தியதுடன், இந்து சமய அறநிலைத்துறை அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் சிறந்த முறையில் தரிசனம் செய்திடும் வகையில் சிறப்பாக பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்,

இக்கூட்டத்தில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .மகேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .இராமகிருஷ்ணன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சையது முகைதீன் இப்ராஹிம், உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) .ஜெயதேவி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நீலகிரி, ஜூலை.8-
நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 190 மனுக்களை பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சமூக பாதுபாப்பு திட்டத்தின் கீழ் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், மாவட்ட சுற்றுலாத்துறையின் சார்பில் கோடை விழா 2026ல் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள், உலக இரத்த கொடையாளர் தினத்தை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று முறைக்கு மேல் இரத்ததானம் வழங்கிய 58 தன்னார்வலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டினார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் திரு.கஷாப்சசாங் ரவி துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) கணேசன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.சங்கர், மாவட்ட சமூக நல அலுவலர் பிரிவீணாதேவி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் மின் பயனீட்டாளர்களுக்கான குறைதீர்க்கும் கூட்டம்மின் செயற்பொறியாளர் தேன்மொழி அறிவிப்பு




மானாமதுரை, ஜூலை.9-

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சிவகங்கை மின் பகிர்மான வட்டம் சார்பில், மின் பயனீட்டாளர்களுக்கான குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 09.07.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை, மானாமதுரையில் உள்ள செயற்பொறியாளர் (பகிர்மானம்) அலுவலகத்தில் நடைபெற உள்ளது.இக்கூட்டத்தில் மின் பயனீட்டாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, தங்களது மின்விநியோகம் தொடர்பான குறைகள் மற்றும் கோரிக்கைகளை நேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு மின் செயற்பொறியாளர் தேன்மொழி கேட்டுக் கொண்டுள்ளார்.மேலும், மின்சாரத்தை பாதுகாப்பாக பயன்படுத்துதல், மின் விபத்துகளைத் தவிர்க்க கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மின்பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு குறித்தும் கூட்டத்தில் விரிவாக விளக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்தில்லாத மதுரை மாநகரை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்“ - காவல் துணை ஆணையர் எஸ். வனிதா அறிவுரை

மதுரை, ஜூலை.8-

மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, விபத்தில்லாத நகரை உருவாக்கும் நோக்கில் சிற்றுந்து (மினி பஸ்) உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான போக்குவரத்து விழிப்புணர்வு முகாம் பெரியார் பேருந்து நிலையம் அருகே மேலமாராட் வீதியில் உள்ள மீனாட்சி மஹாலில் (ஹோட்டல் மதுரை ரெசிடென்சி அருகில்) நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) திருமதி எஸ். வனிதா தலைமை வகித்து, போக்குவரத்து விதிமுறைகளை முழுமையாகக் கடைபிடித்து, "விபத்தில்லாத மதுரை மாநகரை"






உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.இந் நிகழ்ச்சியில் அவனியாபுரம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் கணேஷ் ராம், தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி, போக்குவரத்து காவல் ஆய்வாளர் பால்தாய் ஆகியோர் கலந்து கொண்டு ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு விழிப்புணர்வு ஆலோசனைகளை வழங்கி உறுதிமொழி ஏற்கச் செய்தனர்.முக்கிய அறிவுறுத்தல்கள்:காக்கி சீருடை அணிந்து பணியில் ஈடுபட வேண்டும். பயணிகளை படிக்கட்டில் நின்றோ, தொங்கியோ பயணிக்க அனுமதிக்கக் கூடாது. பேருந்து நிறுத்தங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றி, இறக்க வேண்டும்.போக்குவரத்து விதிகளை மதித்து, மிதமான வேகத்தில் வாகனங்களை இயக்க வேண்டும். அனுமதி பெற்ற வழித்தடங்களில் மட்டுமே இயக்க வேண்டும்.போட்டி போட்டு அல்லது அதிவேகமாக ஓட்டக் கூடாது. மது, புகை, போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் ஓட்டுவது முற்றிலும் தடை. ஏர் ஹார்ன் மற்றும் அதிக சத்தத்தில் பாடல்கள் ஒலிப்பதைத் தவிர்க்க வேண்டும்.பயணிகளிடம் கனிவாக நடந்து கொண்டு, பேருந்துகளை எப்போதும் தூய்மையாக பராமரிக்க வேண்டும். முகாமில் பங்கேற்ற அனைத்து சிற்றுந்து உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களும் போக்குவரத்து விதிகளை முழுமையாக பின்பற்றி, விபத்தில்லாத மதுரை மாநகரை உருவாக்க உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



# மதுரை மாநகராட்சி மண்டலம்1ல் மக்கள் குறைதீர்க்கும் முகாம்: 114 மனுக்கள் பெறப்பட்டது

மதுரை, ஜூலை.8-

மதுரை மாநகராட்சி மண்டலம்1 (கிழக்கு) அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மொத்தம் 114 மனுக்கள் பெறப்பட்டன.முகாமில் மாநகராட்சி மேயர் (பொறுப்பு) மற்றும் துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டன. காலை 10 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெற்ற முகாமில், சொத்து வரி பெயர் மாற்றம் தொடர்பாக 13 மனுக்கள், காலி மனை வரி விதிப்பு தொடர்பாக 13 மனுக்கள், புதிய சொத்து வரி கோரி 18 மனுக்கள், குடிநீர் இணைப்பு, சாலை வசதி, பாதாள சாக்கடை இணைப்பு, பாதாள சாக்கடை வைப்பு தொகை, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பாக 38 மனுக்கள், சுகாதாரம் தொடர்பாக 7 மனுக்கள், நகரமைப்பு மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக 6 மனுக்கள், இதர கோரிக்கைகள் தொடர்பாக 2 மனுக்கள் என மொத்தம் 114 மனுக்கள் பெறப்பட்டன. முகாமின்போது 2 பயனாளிகளுக்கு புதிய பாதாள சாக்கடை இணைப்புக்கான அனுமதி ஆணைகளை மேயர் (பொறுப்பு), துணை மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் உடனடியாக வழங்கினர்.

முகாமில் தலைமைப் பொறியாளர், உதவி ஆணையாளர், நகர்நல அலுவலர், நிர்வாக அலுவலர், உதவி வருவாய் அலுவலர், உதவி செயற்பொறியாளர், சுகாதார அலுவலர் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் போலி ஆவணம் மூலம் நிலத்தை அபகரிக்க முயற்சிப்பதாக போலீஸ் SP யிடம்புகார்

சிவகங்கை, ஜூலை.8-

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் உள்ள வள்ளலார் தெருவைச் சேர்ந்தவர்கள் அண்ணாமலை மற்றும் அவரது 3 சகோதரர்கள். இவர்கள் 4 பேரும் சேர்ந்து சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது.... எங்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலம் சிவகங்கையில் உள்ளது. இந்த புஞ்சை நிலம் 59 பையூர் பிள்ளைவயல் கிராமம் சர்வே எண்43/1 விஸ்தீரணம் 1 ஏக்கர் 72 செண்டும், புல எண் 43/3 விஸ்தீரணம் 8 ஏக்கர் 40 செண்டும் சிவகங்கை டவுன் நகரப் புல எண் 34 1, 35 எங்களுக்கு சொந்தமாக உள்ளது. இந்த நிலத்தில் அரசு போக்குவரத்து கழகம் மற்றும் நுகர்வோர் வாணிப கழகத்திற்கு 76 செண்டு நிலத்தை மட்டும் நீதிமன்ற தீர்ப்பின்



அடிப்படையில் கொடுத்து அதற்கான இழப்பீட்டையும் பெற்று இருக்கிறோம் . இந்நிலையில் மீதமுள்ள எங்களின் நிலத்தை சிவகங்கையில் வசித்து வரும் ரிஸி. ராஜா என்பவர் , முத்துக்குமார், சுந்தரம், காந்திநாதன், பிச்சை, மதி, மற்றும் குருசாமி ஆகியோருடன்கூட்டுச் சேர்ந்து கூட்டுச் சதி செய்து எங்களுக்கு சம்பந்தமே இல்லாத நபர்களை வைத்து உண்மையை மறைத்து பவர் பத்திரம் பதிவு செய்துள்ளார். இந்த பவர் பத்திரத்தை பயன்படுத்தி எங்களுடைய நிலத்தை வேறு சிலருக்கு பத்திரப்பதிவும் செய்துள்ளார். மேற்கண்ட பிரச்சனைகள் தொடர்பாக 4 வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது உண்மைகளை மறைத்து ரிஸி. ராஜா என்பவர் சட்ட விரோதமாக இந்த இடங்களை வேறு சிலருக்கு பட்டா மாறுதல்கள் செய்யவும் தீவிர முயற்சி செய்து வருகிறார். எனவே சமூகம் அவர்கள் ரிஸி. ராஜா மற்றும் இவரோடு சேர்ந்து கூட்டுச் சதி செய்பவர்கள் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து எங்களின் நிலத்தை மீட்டுத் தர உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு வேண்டுகிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# ஆணவப் படுகொலை வேண்டாம்: அரசுப் பள்ளி ஆசிரியரின் பாடல் இணையத்தில் வைரல்!

திருச்சி, ஜூலை.8-

திருச்சி மாவட்டம் மருங்காபுரி அருகே தாளம்பாடி அரசு நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றும் காந்தி, ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "ஆணவப் படுகொலை வேண்டாம்" என்ற கிராமிய மெட்டுப் பாடலை எழுதி பாடியுள்ளார்.சமூக ஒற்றுமை மற்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் இந்தப் பாடல் தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி, பலரின் பாராட்டைப் பெற்று வருகிறது.ஆணவப் படுகொலைக்கு எதிரான விழிப்புணர்வை எளிய கிராமிய இசை வடிவில் மக்களிடம் கொண்டு சென்ற அரசுப் பள்ளி ஆசிரியர் காந்தியின் இந்த முயற்சி சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.







■ சாலையில் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக இயக்கி, பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் இடையூறு ஏற்படுத்தியதுடன், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் ஓட்டிய இளைஞர் மீது போடி தாலுகா காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்து விதிமுறைகளை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். பொதுச் சாலைகளில் அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை இயக்குபவர்கள் மீது தொடர்ந்து சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேனி மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, நரிமேடு பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம் குறித்து உணவினை உட்கொண்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாநகராட்சி அலுவலர்கள் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி, நுண் உரம் செயலாக்க மையத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் கழிவுகளை தரம் பிரித்து மறுசுழற்சி செய்து, நுண் உரம் தயாரிக்கும் பணிகள் மற்றும் மையத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.






# மதுரையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்

மதுரை, ஜூலை.8-

மதுரை குருதியேட்டர் சந்திப்பில் உள்ள லட்சுமி மஹாலில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம், போக்குவரத்து காவல் துணை ஆணையர் எஸ். வனிதா தலைமையில் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் செந்தில்சுரேஷ், செந்தில்குமார், தங்கமணி, கணேஷ்ராம், சோபனா, பஞ்சவர்ணம், பூர்ணகிருஷ்ணன் ஆகியோரும், சார்பு ஆய்வாளர்கள் சந்தனகுமார், லிங்க்ஸ்டன், ஆண்டவர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (TNSTC) மேலாளர் அசோக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.முகாமில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு விபத்தில்லா சாலைப் பயணத்தின் முக்கியத்துவம், செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பதன் அவசியம், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய நடைமுறைகள், வாகனத்தின் உறுதிச்சான்றிதழ் (Fitness Certificate), பதிவு எண் தெளிவாகக் காட்சியளிப்பதன் அவசியம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.மேலும், போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் சாலை விபத்துகளைத் தடுக்கவும், பாதுகாப்பான பயணச் சூழலை உருவாக்கவும் ஆட்டோ ஓட்டுநர்கள் ஒத்துழைக்க வேண்டும் என அதிகாரிகள் வலியுறுத்தினர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161